# மாநிலம் முழுவதும் 58 ஆயிரத்து 463 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 7 லட்சத்து 56 ஆயிரத்து 142 பயனாளிகளுக்கு 2 ஆயிரத்து 750 கோடி ரூபாய் கடனுதவி




**14.12.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் நடைபெற்ற அரசு விழாவில் கடனுதவிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.**

## இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

அரசு நலத் திட்டங்கள் வழங்கக் கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு, மன்னிக்கவும், சிறப்பான நிகழ்ச்சி மட்டுமல்ல, சிறப்பான ஒரு மாநாட்டிற்கு வருகை தந்து முன்னிலை உரை ஆற்றியிருக்கக்கூடிய மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களே!

விழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை ஆற்றியிருக்கக் கூடிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ்., அவர்களே!

முதன்மைச் செயலாளர் அமுதா அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஊரக வளர்ச்சித் துறையின் செயலாளராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ்., அவர்கள், நான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோது, அவர் டில்லியில் ஒரு அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்தார், அதுவும் பிரதமருடைய அலுவலகத்தில் அவர் பணிபுரிந்து கொண்டிருந்தார். ஊரக உள்ளாட்சி, அதிலும் குறிப்பாக, மகளிர் சுய உதவிக்குழுக்களை மேம்படுத்த வேண்டும் என்று நான் தொடர்ந்து சிந்தித்தேன்.

அதிலும் குறிப்பாக, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய வகையில், அவர்கள் வளர்ச்சி பெறக்கூடிய நிலையில், மகளிர் சுய உதவிக் குழு பணியாற்றிட வேண்டும் என்று நான் கருதினேன். அப்படி கருதிய நேரத்தில், அதற்கு யாரை செயலாளராக, யாரிடத்தில் இந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று நாங்கள் ஆலோசனை நடத்தியபோது, என்னுடைய நினைவிற்கு வந்தது நம்முடைய ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கக்கூடிய திருமதி அமுதா அவர்களுடைய நினைவுதான் எனக்கு நினைவிற்கு வந்தது.

டில்லியில், அதுவும் பிரதமர் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கக் கூடிய அந்த அதிகாரியை நாம் அழைத்தால் வருவாரா என்று நான் யோசித்தது உண்டு. அதற்குப் பிறகு இந்தத் தகவல் அவருக்குத் தெரிந்தவுடன், நிச்சயமாக நான் வருகிறேன், உறுதியாக நான் வருகிறேன், அதற்குரிய சம்மதத்தை ஒன்றிய அரசிடம், குறிப்பாக பிரதமரிடத்திலும் நான் அனுமதி பெற்றுவிட்டேன், வருகிறேன் என்று சொல்லி, அதற்குப் பிறகு, அவர் அங்கிருந்து மாற்றல் ஆகி நம்முடைய மகளிர் சுய உதவிக் குழுவைக் கட்டிக் காக்கக் கூடிய ஊரக வளர்ச்சித் துறையின் செயலாளராக இன்றைக்கு அவர் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்று சொன்னால், உள்ளபடியே நமக்கெல்லாம் மிக மகிழ்ச்சியாக அமைந்திருக்கிறது. காரணம், அவர் தர்மபுரி மாவட்டத்தில் ஆட்சித்தலைவராக இருந்தபோதுதான், நான் அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக, துணை முதலமைச்சர் என்ற அந்தப் பொறுப்பை ஏற்றிருந்தபோது அந்த மாவட்டத்தில் பல்வேறு பணிகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ் அவர்கள் துணை நின்றார்கள், அன்றைக்கு அங்கு ஆட்சித்தலைவராக அந்தப் பணிகளையெல்லாம் சிறப்பாகச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்போது மகளிர் சுய உதவிக் குழுவைப் பற்றி நான் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. திருமதி அமுதா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கக்கூடிய காரணத்தால், அது தானாக வளரும், தானாக சிறப்பு பெறும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது.



அதேபோல், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் நடுவன் அரசினுடைய துணை அமைச்சராக இருந்த டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்
திரு.ச.சந்திரன் அவர்களே !
திரு.வி.ஜி.ராஜேந்திரன் அவர்களே !
திரு.ஆ.கிருஷ்ணசாமி அவர்களே !
திரு.சு.சுதர்சனம் அவர்களே !
திரு.டி.ஜெ.கோவிந்தராசன் அவர்களே !
திரு.க.கணபதி அவர்களே !
திரு.ஜோசப் சாமுவேல் அவர்களே !
திரு.கே.பி.சங்கர் அவர்களே !
திரு.துரை சந்திரசேகர் அவர்களே !

நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், ஐ.ஏ.எஸ் அவர்களே !

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குனர் திருமதி. பல்லவி பல்தேவ். ஐ.ஏ.எஸ் அவர்களே!

மாவட்ட ஊராட்சிக் குழுவின் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி அவர்களே!

மாவட்ட அளவிலான வங்கிகள் கூட்டமைப்பு மேலாண்மை இயக்குநர் திரு.பார்த பிரதிம் சென்குப்தா அவர்களே!

பல்வேறு துறைகளை சார்ந்திருக்கக்க கூடிய உயர் அதிகாரிகளே !

அரசு அதிகாரிகளே!

உள்ளாட்சிப் பிரதிநிதிகளே!

தொலைக்காட்சி, பத்திரிகை, ஊடக நண்பர்களே!

காவல் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

இங்கே எழுச்சியோடு திரண்டிருக்கக்கூடிய பெரியோர்களே ! தாய்மார்களே ! சகோதரிகளே!

குறிப்பாக என் பாசத்திற்கும் பேரன்பிற்கும் உரிய மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்திருக்கும் சகோதரிகளே ! தாய்மார்களே !

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்த நிகழ்ச்சியின் துவக்கத்தில் வரவேற்புரை நல்கியிருக்கக் கூடிய இந்தத் துறையின் செயலாளர் திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ்., அவர்கள், இந்த சுய உதவிக் குழு எப்போது தொடங்கப்பட்டது ? யாரால் தொடங்கி வைக்கப்பட்டது ? திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி பொறுப்பேற்றவுடன், தலைவர் கலைஞர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்தில்தான் இதை முதன்முதலாக தொடங்கி வைத்தார். எந்த நோக்கத்தோடு, எந்த அடிப்படையில் இது தொடங்கி வைக்கப்பட்டது என்றால், அதற்கும் அவரே விளக்கம் சொன்னார். பெண்கள், மகளிர், சகோதரிகள் யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் அவரவர்கள் சொந்தக் காலிலே நிற்கவேண்டும். அவர்களுக்கு ஒரு தன்னம்பிக்கையை, தன்மானத்தோடு வாழக்கூடிய அளவிற்கு தன்னம்பிக்கையை தந்தாக வேண்டும். அந்த அடிப்படையில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த சுய உதவிக் குழுவைத் தொடங்கி வைத்தார்கள்.

அதற்குப் பிறகு நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக, துணை முதலமைச்சராக பொறுப்பில் இருந்த நேரத்தில் எந்த அளவிற்கு கவனம் செலுத்தப்பட்டது, எந்த அளவிற்கு இது ஊக்குவிக்கப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். எனவே, அதைப்பற்றி நான் அதிகம் பேசவேண்டிய அவசியமில்லை.

இன்றைக்கு மட்டும் தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால், மகளிர் சுய உதவிக் குழுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தத் திட்டம் புதிதாக புதுப்பித்து, வங்கிகள் மூலமாக பெற்றிருக்கும் கடனை, அதாவது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 3 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கடனுதவி வழங்குகிற விழா இந்த விழா.

திருத்தணியில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் உள்ள எல்லா மாவட்டத்திலும் இந்த நிகழ்ச்சி இன்று நடந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில், இன்று திருத்தணியில் நடைபெறுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கி அதில்

நானும் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு முதலில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.பெரியகருப்பன் அவர்களுக்கு நான் என்னுடைய இதயபூர்வமான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எப்போதும் அமைச்சர்களை பொறுத்தவரை, என்னதான் தமிழ்நாட்டின் அமைச்சராக இருந்தாலும், அவர்கள் மாவட்டத்தை ஒரு முக்கியத்துவம் கொடுத்து அதைக் கவனிப்பதுண்டு. அது அனைவருக்கும் இருக்கக்கூடிய இயல்பு. நானே கூட, முதலமைச்சராக இருந்தாலும், கொளத்தூருக்குச் சென்று விட்டால் எனக்கு ஒரு வேகம் வந்துவிடும். அதுபோல, அமைச்சர்களுக்கு அந்த எண்ணம்தான் வரும், அது தவறு என்று சொல்லமாட்டேன். மக்கள் பணி, மக்களுக்காக ஆற்றக்கூடிய கடமை. அதனால் இந்த நிகழ்ச்சியைக் கூட முதன் முதலில் நடத்த வேண்டும் என்று நான் பெரியகருப்பன் அவர்களை அழைத்துப் பேசியபோது, அவரிடமிருந்து நான் என்ன எதிர்பார்த்தேன் என்றால், எங்கள் மாவட்டம் சிவகங்கையில் நடத்துகிறோம், அங்கு வாருங்கள் என்றுதான் சொல்லுவார் என்று நினைத்தேன்.

ஆனால், அப்படி சொல்லாமல் உங்களுக்கு எது வசதியோ, நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ, அந்த அடிப்படையில் நான் நிகழ்ச்சியை நடத்துவேன் என்ற உறுதி தந்து, அந்த வகையில் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை திருத்தணியில் நடத்தக்கூடிய ஒரு சூழலை அமைத்துத் தந்ததமைக்காக மீண்டும், மீண்டும் மாண்புமிகு அமைச்சர் பெரியகருப்பன் அவர்களுக்கும், இந்தத் துறையின் செயலாளர் திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும் மற்றும் இந்தத் துறையைச் சார்ந்திருக்கும் அனைத்து அரசு அலுவலர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று திருத்தணியில் தொடங்குகிற இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாடு முழுவதும் உள்ள 58 ஆயிரத்து, 463 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 7 லட்சத்து 56 ஆயிரத்து 142 பயனாளிகளுக்கு 2 ஆயிரத்து 750 கோடி ரூபாய் அளவுக்குக் கடனுதவியும். நலத்திட்ட உதவிகளும் கிடைக்க இருக்கிறது. நீங்கள் இதை நல்ல வகையில் பயன்படுத்தி சிறப்பு பெறவேண்டும் என்று நான் உங்களை உளமார வாழ்த்துகிறேன்.

நான் நினைத்துப் பார்க்கிறேன். இங்கு ஆயிரக் கணக்கானவர்கள் திரண்டிருக்கக்கூடிய வகையில் ஒரு விழா என்பது மட்டுமல்ல, ஒரு மாநாடு போல இது ஏற்பாடு செய்யப்பட்டு இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக, நான் வந்தவுடனே உங்களுக்கு நடுவில் நடந்து வந்து உங்களை எல்லாம் நான் சந்தித்தேன், நீங்கள் வாழ்த்து சொன்னீர்கள், அதற்கு நன்றி. அப்போது என்னுடைய மனதில் என்ன நினைத்தேன் என்றால், இதில் ஆண்கள் 25 சதவீதமும், பெண்கள் 75 சதவீதமும் இருக்கிறீர்கள். இதை ஏன் நான் சொல்கிறேனென்றால், அதில் ஒரு விஷயம் இருக்கிறது. இவ்வளவு அமைதியாக ஒரு கட்டுப்பாட்டுடன் நீங்கள் அமர்ந்திருக்கக்கூடிய காட்சியைப் பார்க்கும்போது, இனிமேல் மகளிர்தான் பெண்கள் தான் முடிவு செய்ய முடியும் என்ற நிலை உருவாகிறது.

சாதாரணமாக பெண்கள் இவ்வளவு அமைதியாக உட்கார்ந்து எங்கும் நான் பார்த்ததில்லை. இவ்வளவு பெரிய கூட்டத்தில் இவ்வளவு கட்டுப்பாட்டோடு நீங்கள் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்றால், இதிலேயே நீங்கள், இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரைக்கும் மிகப் பெரிய வெற்றியை தொடர்ந்து நீங்கள் பெறப்போகிறீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், நான்கு பெண்கள் ஒரு இடத்தில் இருந்தால் அந்த இடம் கலகலவென இருக்கும். ஆயிரக்கணக்கில் பெண்கள் உட்கார்ந்திருக்கும்போது, இவ்வளவு அமைதியாக, இவ்வளவு கட்டுப்பாட்டோடு உட்கார்ந்திருக்கக் கூடிய இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது.

2006–2011 ஆண்டு காலத்தில் நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது பல்லாயிரக்கணக்கான மகளிருக்கு பல மணி நேரம் நின்று கொண்டே கடனுதவியை வழங்கினேன், சுழல் நிதியை வழங்கினேன். அதன் காரணமாக தமிழ்நாட்டைச் சார்ந்திருக்கக் கூடிய மகளிர் சுய உதவிக் குழு உயர்வுக்கு பாடுபட்டோம். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக தேர்தல் பிரச்சாரத்துக்கு நான் எந்த ஊருக்குப் போனாலும், அதிலும் குறிப்பாக கிராமப் புறங்களில் பிரச்சாரம் செய்தால் – நான் மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்தவள் என்றும், நீங்கள்






செய்த உதவியால் தான் என் குடும்பம் நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறது என்று நிறைய பெண்கள் இப்போதும் என்னிடத்தில் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் புதிய ஆட்சி அமைந்தவுடன் – மகளிர் சுய உதவிக் குழுவை மறுபடியும் புதுப்பொலிவோடு புதுப்பிக்க வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன். அதை இன்றைக்கு சிறப்பாக நிறைவேற்றித் தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்களும், செயலாளர் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ் அவர்களும் மற்றும் அவருக்குத் துணையாக இருக்கக்கூடிய அனைவரும் இன்றைக்கு அந்த கவனத்தை செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்களுடைய பொருளாதார முன்னேற்றத்துக்கு அடித்தளம் அமைத்த ஆட்சிதான் தலைவர் கலைஞர் தலைமையில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி. அந்த ஆட்சியில்தான் இந்தக் குழுக்கள் உருவாக்கப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் முதன் முதலில் தொடங்கியிருந்தாலும், அதைத் தொடர்ந்து சேலம், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் அது தொடங்கப்பட்டது. அடுத்து வந்த ஆட்சி அந்தத் திட்டத்தை முறையாக செயல்படுத்தவில்லை. நான் அரசியலாக்க விரும்பவில்லை. இந்த சுய உதவிக் குழுவின் வரலாறை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

1996 ஆம் ஆண்டு மீண்டும் கலைஞர் முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப் பட்டன. முதலில் 5177 சுய உதவிக் குழுக்களும், அதற்கு அடுத்த ஆண்டில் 7 மாவட்டங்களில் 6014 மகளிர் சுய உதவிக் குழுக்களும் – அதற்கு அடுத்த ஆண்டில் 8 மாவட்டங்களில் 15,029 சுய உதவிக் குழுக்களும் உருவாக்கப்பட்டது. இப்படியே அது வளர்ந்தது.

2006 ஆம் ஆண்டு நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த போது ஆயிரக்கணக்கு என்பது லட்சக்கணக்கு ஆனது.

இன்று தமிழ்நாடு முழுவதும் 7.22 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை பெருமையோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதில் ஒரு கோடியே 6 லட்சத்து 68 ஆயிரம் மகளிர் உறுப்பினராக இடம்பெற்றிருக்கிறார்கள்.

இத்தனை லட்சம் குழுக்கள் செயல்படுகிறது என்றால் – ஒரு கோடிக்கும் அதிகமான மகளிர் இதில் இயங்கி வருகிறார்கள் என்றால் – அதற்கு விதை போட்டவர் தான் நம்முடைய இதயத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் அழுத்தந்திருத்தமாக மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். அதனால் தான் மகளிர் நலம் காத்த மாண்பாளர் என்று தலைவர் கலைஞர் அவர்களை இன்றைக்கும் போற்றிக்கொண்டிருக்கிறோம்.

மகளிரை ஒருங்கிணைக்கிறோம் – கடன் கொடுக்கிறோம்– அதை அவர்கள் திருப்பிக் கட்டுகிறார்கள் – இது ஏதோ ஒரு வழக்கமான திட்டம் (ஸ்கீம்) என்று நினைக்கக்கூடாது. எத்தனையோ கடன் கொடுக்கும் திட்டத்தைப் போல இதுவும் ஒரு திட்டம் என்று சொல்ல முடியாது.







ஒரு பெண், யார் தயவையும் எதிர்பார்த்துக் காத்திருக்காமல் அவரவர்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு, சொந்தக் காலில் நின்று அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு அடித்தளம் அமைக்கக் கூடிய திட்டம் தான் இந்த மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம்.

- ➢ சிக்கனத்தை உருவாக்குவது
- ➢ அதன் மூலமாக சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவது
- ➢ குடும்ப எல்லைகளைத் தாண்டி சிந்திக்கும் திறனை உருவாக்குவது
- ➢ தானே சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குவது
- ➢ அனைவரும் சேர்ந்து கூட்டுறவு மனப்பான்மையுடன் வாழந்திட வேண்டும்,

எத்தனையோ நல்ல குணத்தை இக்குழுக்களில் இணைவதன் மூலமாக ஒரு பெண் பெறுகிறார்.

தனிமனிதர்களாக இல்லாமல் ஒரு குழுவாக வாழும் போது ஒரு பெண் தன்னம்பிக்கை பெறுகிறார். அத்தகைய தன்னம்பிக்கையை இந்தத் திட்டம் உருவாக்குகிறது.

இந்தத் திட்டத்தின் மகுடமாக இருப்பது சுழல் நிதி. இந்த சுழல் நிதி பெண்கள், பொருளாதாரத்தின் தலைநிமிர்ந்து நிற்க தூண்டுதலாகவும் அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

- ➢ இந்த நிதி ஆண்டில் மட்டும் 17,479 சுய உதவிக் குழுக்களுக்கு 87.39 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதியாக விடுவிக்கப்பட்டுள்ளது.
- ➢ மாற்றுத்திறனாளி, நலிவுற்றோர் கண்டறியப்பட்டு 5838 சங்கங்கள் மூலமாக 14.59 கோடி ரூபாய் இந்த நிதி ஆண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.
- ➢ மகளிர் தயாரிக்கும் பொருளுக்கு உரிய விலை கிடைக்கவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைச் சந்தைப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- ➢ வட்டார அளவிலான கூட்டமைப்புகளை ஏற்படுத்துவதன் மூலமாக கூட்டுறவு வங்கிக் கடன்களுக்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.
- ➢ இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதற்கான இலக்கு நிர்ணயம் செய்யும் முறை நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதுதான் – 2007 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.
- ➢ இதுவரை 36 லட்சத்து, 97 ஆயிரத்து 59 குழுக்களுக்கு ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 13 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.
- ➢ இந்த ஆண்டில் 20 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தர இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

இதுவரை 6777 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் இந்த தொகை 10 ஆயிரம் கோடி ஆகிவிடும். அடுத்த ஆண்டுக்குள் அடுத்த 10 ஆயிரம் கோடி இலக்கை எட்டிட நான் உத்தரவிட்டுள்ளேன். சிறப்பு முகாம்கள்





அமைத்து கடன் வழங்குவதை துரிதப்படுத்தவும் நான் கேட்டுக்கொண்டுள்ளேன்.

- 10 முதல் 20 லட்சம் ரூபாய் வரை சொத்துப் பிணையம் இல்லாமல் கடன் வழங்க குறுந்தொழில் கடன் உத்தரவாத நிதியும் வழங்கப்பட்டு வருகிறது.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை உருவாக்கவும், அக்கூட்டமைப்புகளுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கவும் உத்தரவுகள் போடப்பட்டுள்ளது. இந்த வகையில் 10 இலட்சம் முதல் ஒன்றரைக் கோடி ரூபாய் வரை கடன் பெறலாம்.
- மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



- சான்று விதை உற்பத்தி மையம் செயல்படுகிறது.
- இயற்கை பண்ணையம் என்ற திட்டம் நடைமுறையில் உள்ளது.
- விவசாயம், கைவினைப் பொருட்கள் செய்தல், உணவு பதப்படுத்தும் தொழில் செய்தல் ஆகியவை ஊக்கப்படுத்தப்படுகிறது.
- இவை அனைத்துக்கும் மேலாக தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- மகளிர் சுய உதவிக் குழுக்களின் அனைத்துப் பொருட்களையும் சந்தைப்படுத்த வழிகாட்டி வருகிறோம்.
- கழக ஆட்சியில் முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை மீண்டும் புதுப்பித்து இருக்கிறோம்.
- தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறோம்.
- வறுமை ஒழிப்பு என்பதையும் தாண்டி, ஊரகத் தொழில் மேம்பாட்டுத் திட்டமாக இதனை வடிவமைத்துள்ளோம்.

இப்படி ஏராளமான திட்டங்களை நம்முடைய தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டங்களை தலைப்புச் செய்திகளாக மட்டுமே சொன்னேன். இவை அனைத்தையும் விரிவாகச் சொன்னால் பல மணி நேரம் ஆகும். ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமானால், மகளிர் அனைவரையும் மேம்படுத்தும் மகத்தான திட்டங்களைத் தான் நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் தேர்தலை சந்திப்பதற்கு முன்பு நான் சொன்ன உறுதிமொழிகளை முழுமையாக நாங்கள் நிறைவேற்றி விட்டோம் என்று நான் சொல்லவில்லை, படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால், நிறைவேற்ற முடியாமல் நாங்கள் விட்டுவிட மாட்டோம். அனைத்தையும் நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றியே தீருவோம் என்ற அந்த உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மகளிர் மேம்பாடு மூலமாக அவர்களது குடும்பமும்—அந்த குடும்பத்தின் மூலமாக சமூகமும் மேம்பாடு அடையும். சமூக மேம்பாட்டில் தான் இந்த மாநிலத்தின் மேம்பாடு அடங்கி இருக்கிறது.

திராவிட இயக்கத்தின் அடிப்படையான கொள்கையில் ஒன்று, பெண்ணுரிமை, மகளிர் மேம்பாடு என்பதாகும். பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும் என்ற தீர்மானம் 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் நடத்திய சுயமரியாதை இயக்க மாநாட்டில் அந்தத்





தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தகைய தீர்மானத்தைப் போட்டவர் தந்தை பெரியார் அவர்கள். 1989 ஆம் ஆண்டு பெண்களுக்கும் சொத்தில் சம பங்கு என்ற சட்டத்தை நிறைவேற்றிக் காட்டியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

அந்த சட்டத்தைக் கொண்டுவந்து சட்டமன்றத்தில் நிறைவேற்றுகிறபோது தலைவர் கலைஞர் சொன்னார், “பெரியார் அந்த தீர்மானத்தைக் கொண்டு வந்த போது நான் ஐந்து வயது பையன். இன்று அவரது தீர்மானத்தை நான் சட்டமாகக் கொண்டு வரும் போது எனக்கு 65 வயது” என்று குறிப்பிட்டு அந்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தார். இதனை நான் இங்கே சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், பெண்களின் உரிமைக்கான இத்தகைய புரட்சிகர சீர்திருத்தத்தை நூற்றாண்டுக்கு முன்பே முழங்கிய இயக்கம் தான் திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அத்தகைய தலைவர் தான் தந்தை பெரியார் அவர்கள். அவர் வழி வந்த திராவிட முன்னேற்றக் கழகம் மகளிருக்கான ஏராளமான திட்டங்களைத் தீட்டி உள்ளது.



- ➢ சொத்தில் பெண்களுக்கு சம உரிமை.
- ➢ பணியிடங்களில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு.
- ➢ உள்ளாட்சித் அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு.
- ➢ கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித்தொகை.
- ➢ விதவைகளுக்கு மறுவாழ்வுத் திட்டம்.
- ➢ **ஆரம்ப பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக** பெண்களைத்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்ற சட்டம்.
- ➢ ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்கு திருமணம் என்றால், திருமணத்திற்கு உதவி செய்யக்கூடிய திட்டம் இந்தியாவிலேயே முதன்முதலாக **தமிழ்நாட்டில்தான் தலைவர் கலைஞருடைய** ஆட்சிக்காலத்தில்தான் கொண்டுவரப்பட்டது.
- ➢ அனைத்துக்கும் மேலாக பெண்கள் தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் மகளிர் சுய உதவிக்குழு திட்டம்.
- ➢ ஏழைப் பெண்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கியது திமுக அரசு.

இப்படி பெண்களின் முன்னேற்றத்திற்காக எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம்.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் – பொறுப்பேற்ற அன்றே மகளிருக்கு கட்டணமில்லாத பேருந்து பயணத்துக்கு உத்தரவிட்ட கைதான் இந்தக் கை.

➢ ஐந்து பவுனுக்கு கீழ் அடமானம் வைக்கப்பட்டு பெற்ற கடனை ரத்து செய்தோம்.

➢ மகளிர் சுய உதவிக்குழுக்கள் வாங்கிய கடன்கள் 2756 கோடி ரூபாய் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

அந்த வரிசையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 3000 கோடி ரூபாய்க்கு இன்று கடன் வழங்கயிருக்கிறோம். இதன் மூலமாக தொழில் முனைவோர்களாக மட்டுமல்ல–தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் அனைத்து மகளிரும் உயர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி வாழ்வதற்கான, நீங்கள் உயர்வதற்கான அனைத்து உதவிகளையும் என்னுடைய தலைமையில் இருக்கக்கூடிய, மன்னிக்க வேண்டும், என்னுடைய தலைமையில் என்று சொல்லக்கூடாது, நம்முடைய ஆட்சி இப்போது நடந்து கொண்டிருக்கிறது, நம்முடைய ஆட்சியின் மூலமாக இவைகள் எல்லாம் தொடரும், தொடரும் என்ற உறுதிகூறி, மீண்டும் சொல்கிறேன், இவ்வளவு அமைதியாக இந்த நிகழ்ச்சி நடந்திட காரணமாக இருந்த இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடைபெறுகிறேன்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

விலை ரூ.15 மலர் 23 இதழ் 9 ஜனவரி 2022

கௌரவ ஆசிரியர்கள்

திருமதி. **ம.பல்லவி பல்தேவ்,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தலைமை செயல் அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **ஜெ. இ. பத்மஜா,** இ.ஆ.ப.,
முதன்மை செயலாக்க அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்,

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
**பா.செல்வராஜன்,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **சி. சுஜாதா ஜேக்கப்,** கூடுதல் இயக்குநர்,
**ஜே. கணேஷ் கண்ணா,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **எஸ்.கவிதா,** கூடுதல் இயக்குநர்,
**நா.அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், (TNRTP)

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
**வா.ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர் : திருமதி. **சு. சசிகலா**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

கணினி வடிவமைப்பு
**ஸ்ரீ மூகாம்பிகை ஹைடெக் பிரிண்ட்ஸ்**



**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**
'முற்றம்',
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412



**முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.**




## குறளும்-பொருளும்

**அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய**
**செறுவார்க்குஞ் செய்யா விடல்**

தீமை செய்தவர்க்கு அதையே திருப்பிச் செய்யாமலிருத்தலை, எல்லா அறிவிலும் முதன்மையான அறிவு என்று போற்றுவர்.

## உள்ளே...


| | |
|---|---|
| மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா | 11 |
| தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு | 14 |
| சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்கள் வழங்குதல் | 16 |
| மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு / பொங்கல் வாழ்த்துகள் | 17 |
| தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டச் செயல்பாடுகள் குறித்த களப்பயணம் | 20 |
| தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் | 23 |
| தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் | 27 |
| தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் | 31 |


**twitter**

“ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்கள் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர் கணக்கில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ”

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.11.2021 அன்று வேலூர் மாவட்டம், மேல் மொணவூரில் நடைபெற்ற அரசு விழாவில், புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களுக்கு 3510 புதிய குடியிருப்புகள் மற்றும் ரூ. 30 கோடி மதிப்பீட்டில் முகாம்களில் குடிநீர், மின்சாரம், சாலை வசதி போன்ற அடிப்படை திட்டப் பணிகள் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முகாம்வாழ் தமிழர்களுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மேல் மொணவூர் மற்றும் குடியாத்தம் ஆகிய முகாம்களில் செயல்படும் 13 சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சுழல் நிதி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுத்துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையர் திருமதி.ஜெசிந்தா லாஸரஸ், இ.ஆ.ப., வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.11.2021 அன்று திருப்பூர் மாவட்டம், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி, மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா.இராமச்சந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.வினீத், இ.ஆ.ப., திருப்பூர் மாநகராட்சி ஆணையர் திரு. கிராந்தி குமார் பாடி இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு ஆணைகள் வழங்குதல்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.11.2021 அன்று கோயம்புத்தூர், வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற அரசு நலத் திட்டங்கள் வழங்கும் விழாவில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 660 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 2000 உறுப்பினர்களுக்கு ரூ.25.61 கோடி கடன் இணைப்பு ஆணைகளை வழங்கினார். மேலும், அங்கு அமைக்கப்பட்டிருந்த கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் அரங்கினைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.11.2021 அன்று நாகர்கோயில் சுற்றுலா மாளிகையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜெ.ஜி.பிரின்ஸ், திரு. எஸ்.ராஜேஷ்குமார், திரு.எம்.ஆர்.காந்தி, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திரபாபு, இ.கா.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி. பி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.அரவிந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆய்வு





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.11.2021 அன்று வடகிழக்கு பருவமழையையொட்டியும், வங்கக் கடலில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாகவும், காஞ்சிபுரம் மாவட்டம், வரதராஜபுரம் ஊராட்சிக்குட்பட்ட பி.டி.சி. குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்து, சீரமைப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உடன் மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. எஸ்.ஆர்.ராஜா, திரு. கு.செல்வப்பெருந்தகை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.11.2021 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், ஆதனூர், அடையாறு ஜீரோ பாயிண்டில் கனமழையால் ஏற்பட்டுள்ள நீர்வரத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. கு.செல்வப்பெருந்தகை, திரு. எஸ்.ஆர்.ராஜா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.12.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் நகராட்சி, இரும்புலியூர் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட வன்னியன் குளத்தில் மேற்கொள்ளப்பட்ட வெள்ளத்தடுப்புப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தாமோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.ராஜா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப., சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. பி.பொன்னையா, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர.ராகுல்நாத், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மற்றும் தீனதயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்களும், சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கில் 19.11.2021 அன்று ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், தீனதயாள் கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், திட்டங்களை செயல்படுத்திட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்புகள், திறன் பயிற்சிகள், வேலைவாய்ப்புகள் போன்றவை குறித்தும், அடைய வேண்டிய இலக்குகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ஜே. இ. பத்மஜா, இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் DDU-GKY திட்டத்தின் வாயிலாக மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம் 14–11–2021 அன்று சிவகங்கை மன்னர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற பகுதியைச் சார்ந்த வேலை வாய்ப்பற்ற 1775 இளைஞர்களும், பல்வேறு மாவட்டங்களை சார்ந்த 42 தனியார்துறை வேலை வாய்ப்பு வழங்கும் நிறுவனங்களும் கலந்து கொண்டனர். இவ்வேலை வாய்ப்பு முகாமில் தகுதியான 507 இளைஞர்கள் நேரடி வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர். மேலும் 151 இளைஞர்கள் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.



சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி. மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்று துவங்கி வைத்த இம்முகாமில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி. தமிழரசி ரவிக்குமார், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. மாங்குடி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. க. வானதி வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் மகளிர் திட்டத்தின் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்களின் கலந்தாய்வு கூட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மற்றும் தீனதயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்களுடன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், **03–12–2021** அன்று சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், தீனதயாள் கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், திட்டங்களை செயல்படுத்திட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்புகள், திறன் பயிற்சிகள், வேலைவாய்ப்புகள் போன்றவை குறித்தும், மாவட்டம் வாரியாக அடைய வேண்டிய இலக்குகள் குறித்தும் அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது, “மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக ஆக்கப்பூர்வமான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இத்திட்டங்கள் முழுவதும் சுய உதவிக் குழுக்களை சென்றடையும் வண்ணம் செயல்பட வேண்டும் எனவும், பிற துறைகளுடன் ஒன்றிணைந்து செயல்பட்டு, அத்துறைகளின் மூலம் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற வேண்டும் எனவும், அரசின் திட்டங்களைப் பயன்படுத்தி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு பொருளாதார வளர்ச்சி பெற வேண்டும் எனவும், சிறு தொழிலில் ஈடுபட்டுள்ள சுய உதவிக் குழுக்கள், மேலும் ஊக்கத்துடன் செயல்பட்டு, பெரிய அளவிலான தொழில்களை மேற்கொள்ளும் அளவிற்கு உயர வேண்டும் " எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர்கள், அனைத்து மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்கள் வழங்குதல்




நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் 25.10.2021 அன்று மாபெரும் வாடிக்கையாளர் தொடர்பு முகாம் நடைபெற்றது. மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், 1,013 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.57.59 கோடி வங்கிக் கடன் இணைப்பு மற்றும் 3 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.71 இலட்சம் வங்கிப் பெருங்கடன் ஆகியவை வழங்கப்பட்டது. விழா அரங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்களின் விற்பனை அங்காடியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு சுய உதவிக் குழுக்களிடம் பொருட்கள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார். இந்த நிகழ்வின் போது, நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், வங்கிகளின் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணை வழங்குதல்

கோயம்புத்தூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றின் சார்பில், DDU-GKY திட்டத்தின் கீழ் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் 27.11.2021 அன்று அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்றது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத்துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.




இம்முகாமில் 4180 இளைஞர்கள் பங்கேற்றனர். 72 முன்னணி நிறுவனங்கள் பங்கு பெற்று தகுதி வாய்ந்த இளைஞர்களை தேர்வு செய்தன. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட 310 நபர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார். இம்முகாமில் கோவை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் (பொ) திருமதி. கே.கவிதா, உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணை வழங்குதல்




திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றின் சார்பில், மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 30.11.2021 அன்று திருப்பூர், தாராபுரம் மகாராணி கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.வினீத், இ.ஆ.ப., முன்னிலை வகித்தார்.


இம்முகாமில் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணியாற்ற தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.11.2008 அன்று சென்னையில் மணிமேகலை விருது மற்றும் 3000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கினார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.12.2021 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.




**இணைவோம், உழைப்போம், வளர்வோம்**
**முனைவோம், முயல்வோம், உயர்வோம்**

**- மு. க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் திகழவும், மகளிருக்கு பல நலத்திட்டங்களை உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அனைவரையும் உள்ளடக்கிய சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும் திட்டங்கள்.

TNSRLM

### தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

**ஊரக ஏழை மக்களுக்காக சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, நிதி உள்ளிட்ட பல்வேறு சேவைகளைப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தைப் பெருக்குவது மற்றும் இளைஞர்களுக்கு திறன் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.**

TNULM

### தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

**நகர்ப்புற அடித்தட்டு மற்றும் புலம் பெயர்ந்த மக்களிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, திறன் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்புகளின் மூலம் பொருளாதார மேம்பாடு பெற்றிட வழிவகுப்பதாகும்.**

TNRTP

### தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

**ஊரக நிறுவனங்களை ஊக்குவிப்பது, அவர்களுக்குத் தேவையான நிதி உதவிகளை அமைத்துத் தருவது, வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும்.**

முகக்கவசம் அணிவோம்.. தனிநபர் இடைவெளி கடைபிடிப்போம்...

**மு.க.ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்,

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள் : 11.01.2022

## உங்களில் ஒருவனாக பயணிப்பேன்!

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
- பாரதியார்

மகளிர் யாருடைய துணையையும் எதிர்பாராமல் அவர்கள் சொந்தக் காலிலேயே நிற்க வேண்டும். அவர்கள் அனைவரும் பொருளாதார சமூக மேம்பாடு அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கோடு இந்தியாவிலேயே முதன்முதலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு தருமபுரியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கி வைக்கப்பட்டன.

தருமபுரியைத் தொடர்ந்து பல மாவட்டங்களில் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு வெகுவாக வளர்ச்சியடைந்தன. நான் 2006 ஆம் ஆண்டு உள்ளாட்சித் துறை அமைச்சராக பதவி வகித்தபோது, இக்குழுக்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருந்து லட்சக்கணக்கில் உயர்ந்தது. தமிழகத்தில் தற்போது 7.22 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த இயக்கம் இன்று 1 கோடியே 6 லட்சத்து 68 ஆயிரம் மகளிர்களைக் கொண்டு, மாபெரும் மகளிர் இயக்கமாக செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மகளிருக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, முதற்கட்டமாக சுழல் நிதி வழங்கியும், பொருளாதார நிலையில் மேம்பட மணிமகுடமாக இருக்கும் வங்கிக் கடன் இணைப்பு வழங்கியும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த ஆண்டில் ரூபாய் 20 ஆயிரம் கோடி வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தற்போது வரை ரூபாய் 15 ஆயிரம் கோடி அளவிற்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுவினரின் வாழ்வு வளம் பெற துணைநிற்கும் நமது அரசானது, கொரோனாக் காலப் பெருந்துயரில் இருந்து மகளிர் சுய உதவிக் குழுக்களை காத்திடும் வகையில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட ரூபாய் 2,674 கோடி கடனை தமிழக வரலாற்றில் முதன்முறையாக தள்ளுபடி செய்துள்ளது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மகளிர் மேம்பாட்டில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, கடந்த மாதம் மாநில அளவில் பிரத்யேகமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக தனிப்பெரும் விழாவை மாபெரும் விழாவாகக் கொண்டாடியது. இவ்விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2000 கோடி ரூபாய்க்கு மேல் வங்கிக் கடன் வழங்கப்பட்டதில் நீங்கள் பெருமகிழ்ச்சி அடைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இதனை நல்ல வகையில் பயன்படுத்தி மகளிர் அனைவரும் சிறப்பு பெற வேண்டும். மகளிர் சுய உதவிக் குழு மூலமாக நீங்கள் அனைவரும் தொழில் முனைவோர்களாக மட்டுமல்லாமல் வாழ்வில் தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் உயர வேண்டும் என நான் விரும்புகிறேன்.

இதற்காக நான் உங்களின் தந்தையாக, சகோதரனாக, உங்களில் ஒருவனாக தொடர்ந்து உங்களோடு பயணிப்பேன். உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் நல் வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டச் செயல்பாடுகள் குறித்த களப்பயணம்





தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டச் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்திட மேலாண்மை இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டாரம், சித்தனக்காவூர் கிராமத்தில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் பார்வையிட்டு ஆய்வு செய்திட **01.11.2021** அன்று களப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குனர்கள் திரு. பா. செல்வராஜன், திருமதி. சி. சுஜாதா ஜேக்கப், திருமதி. எஸ். கவிதா ஆகியோர் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், மகளிர் திட்ட தலைமை அலுவலகத்தின் அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்டோர் இந்தக் களப்பயணத்தில் கலந்து கொண்டனர்.

களப்பயணத்தின் முதற்கட்டமாக சித்தனக்காவூர் ஊராட்சியில் செயல்படும் கூட்டமைப்பு, மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள் பார்வையிடப்பட்டு, சமுதாய முதலீட்டு நிதி (CIF), நலிவுற்றோர் குறைப்பு நிதி (VRF), சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடனை திரும்பச் செலுத்துதல், புதிய வாழ்வாதாரத் தொழில்கள் போன்ற பல்வேறு திட்ட செயல்பாடுகள் குறித்து, திட்டப் பணியாளர்களான உத்திரமேரூர் வட்டார இயக்க மேலாண்மை அலகின் வட்டார மேலாளர், சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், சுய உதவிக் குழுக்கள் தற்சார்பு அடையப் பெற்றுள்ளனவா ? அனைத்து சமுதாயம் சார்ந்த அமைப்புகளும், நிர்வாகிகளும் தகுந்த பயிற்சி பெற்றுள்ளார்களா ? என நேரடி கலந்தாய்வு செய்யப்பட்டது. மேலும், சுய உதவிக் குழுக்கள் குறித்த விபரங்களை மகளிர் e-mathi இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட விபரம் குறித்தும் கேட்கப்பட்டது.

தொடர்ந்து, சித்தனக்காவூர் ஊராட்சியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் தொழில் நடவடிக்கைளான மரக்கரி உற்பத்தி மற்றும் விவசாயம் மேற்கொள்ளுதல் ஆகியவற்றை நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், சுய உதவிக் குழுக்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று அவர்களின் வாழ்வாதாரம் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தனர்.





# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டச் செயல்பாடுகள் குறித்த களப்பயணம்













**நாம் உண்ணும் உணவு நமக்கு வலிமையையும், ஆரோக்கியத்தையும் தருகிறது. நமது முன்னோர்கள் தங்களின் உடல் நலத்தைப் பேணவும், வலிமையுடன் இருக்கவும் சிறுதானிய உணவுகளையே உண்டு வந்துள்ளனர். இத்தகைய சிறுதானிய உணவுகளைப் பற்றி நாம் இப்பகுதியில் காணலாம்.**

# சத்தும் சுவையும் நிறைந்த கேழ்வரகு அவல் உப்புமா



கேழ்வரகில் அதிகளவு சத்துக்கள் நிறைந்துள்ளது. கேழ்வரகு அவலில் சத்தான சுவையான உப்புமா செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

**தேவையான பொருட்கள்:**

கேழ்வரகு அவல் – ஒரு கப், வெங்காயம் – ஒன்று, கடுகு – அரை டீஸ்பூன், உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு – தலா ஒரு டீஸ்பூன், காய்ந்த மிளகாய் – 2, பெருங்காயத்தூள் – சிறிதளவு, மஞ்சள் தூள் – ஒரு சிட்டிகை, கறிவேப்பிலை, கொத்தமல்லித் தழை – சிறிதளவு, எண்ணெய் – ஒரு டீஸ்பூன், உப்பு – தேவையான அளவு

**செய்முறை:**

கேழ்வரகு அவலை நன்றாக சுத்தம் செய்து 15 நிமிடம் ஊற வைக்கவும். வெங்காயம், கொத்தமல்லியை பொடியாக நறுக்கி கொள்ளவும். கடாயில் எண்ணெய் சூடானதும் கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு, காய்ந்த மிளகாய், பெருங்காயத்தூள் போட்டு தாளித்த பின்னர் வெங்காயம் சேர்த்து வதக்கவும். வதக்கியதும் கேழ்வரகு அவலை சேர்க்கவும். இதனுடன் மஞ்சள் தூள், உப்பு சேர்த்துக் கிளறி 10 நிமிடம் மூடி வைக்கவும். அடுப்பை 'சிம்'மில் வைக்கவும். பிறகு, கறிவேப்பிலை, கொத்தமல்லி தழை சேர்த்து இறக்கவும். நாவிற்கு சுவையும், உடலுக்கு ஆரோக்கியமும் தரும் இந்த கேழ்வரகு அவல் உப்புமாவை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

# பயன்தரக் கூடிய எளிய வீட்டுக் குறிப்புகள்



❖ ஒவ்வொரு வீட்டிலும் சமையலுக்கு காய்கறி வாங்கி வரும் போது அதனுடன் கருவேப்பிலையையும் வாங்கி வருவோம். கருவேப்பிலை அதிகமாக இருந்தது என்றால் அவை சீக்கிரத்தில் வாடி காய்ந்து விடும். இவ்வாறு காய்ந்த கருவேப்பிலையை தூக்கி எறிந்து விடுவோம். அதற்கு பதிலாக இந்த கறிவேப்பிலையை மிக்ஸியில் சேர்த்து பொடியாக அரைத்து வைத்துக்கொண்டால் தக்காளி சட்னி, வெங்காய சட்னி போன்றவற்றை செய்யும் பொழுது அதனுடன் ஒரு ஸ்பூன் இந்த கருவேப்பிலை பொடியையும் சேர்த்து அரைக்கலாம். இது உடலுக்கு மிகவும் ஆரோக்கியத்தை கொடுக்கும்.

❖ பலவித உணவுகளை சமைக்கும் பொழுது ஒரு சில குறிப்பிட்ட உணவு வகைகளுக்கு எலுமிச்சைப் பழச்சாறு பயன்படும். ஒருசில நேரத்தில் முழு எலுமிச்சம் பழமும் தேவைப்படாது. அதில் பாதி எலுமிச்சை பழத்தை மட்டும் பயன்படுத்தி மீதி எலுமிச்சை பழத்தை அப்படியே எடுத்து வைத்து விடுவோம். இந்த பழம் வீணாக அழுகிதான் போய்விடும். இந்தப் பழம் வீணாகாமல் இருக்க ஒரு பிளாஸ்டிக் டப்பாவின் மூடியை எடுத்து அதனுள் இந்த எலுமிச்சை பழத்தை கவிழ்ந்து ரப்பர் பேண்ட் போட்டு பிரிட்ஜில் வைத்து விட்டால் சில நாட்களுக்கு இந்த பழம் அழுகாமல் நன்றாக இருக்கும்.

❖ தக்காளி சட்னி, வெங்காய சட்னி செய்வதற்கு தக்காளி வெங்காயத்தை நன்றாக வதக்கி விட்டு, அதனை ஆற வைத்து அதன் பிறகு தான் அரைக்க வேண்டும். அப்படி இவற்றை ஆறவைக்க நேரம் இல்லாத பொழுது இதனை சுடச்சுட மிக்ஸி ஜாரில் சேர்த்து அதனுடன் இரண்டு மூன்று ஐஸ் கட்டிகளையும் சேர்த்து அரைக்க வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது மிக்ஸி ஜாரில் இருந்து சட்னி வெளியே வராமலும் மிக்ஸி ஜார் சீக்கிரத்தில் வீணாகாமலும் இருக்கும்.

❖ வீட்டில் வாங்கி வைக்கும் நெய் ஆரம்பத்தில் இருக்கும் மணத்திலும் சுவையிலும் நாட்கள் செல்ல செல்ல இருக்காது. அவற்றில் ஒருவித சிக்கு வாடை வர ஆரம்பித்துவிடும். இவ்வாறு சிக்கு வாடை வராமல் இருக்க நெய்யில் சிறிய துண்டு வெல்லத்தை சேர்க்க வேண்டும். இவ்வாறு செய்வதால் வெகுநாட்களுக்கு நெய்யின் மணம் மாறாமல் இருக்கும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

# கைவினைஞர்களுக்கு வாழ்வாதாரம் தரும் நெல்லை கிராப்ட்ஸ்

திருநெல்வேலி மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் 'நெல்லை கிராப்ட்ஸ்'' என்ற கைவினைப் பொருள் விற்பனை அங்காடி நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் (CLC) உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்கள் அனைத்தும் ஒரே இடத்தில் மொத்த மற்றும் சில்லறையாக விற்பனை செய்யப்படுகிறது.

இந்த 'நெல்லை கிராப்ட்ஸ்' விற்பனை அங்காடியில் விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களும் Amazon, Flipkart போன்ற நிறுவனங்களின் வழியாக இணையவழி (Online) விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

குறைந்த லாபத்தில் தங்கள் பொருட்களை விற்பனை செய்து வந்த திருநெல்வேலி மாவட்ட கைவினைக் கலைஞர்களுக்கு தற்போது நல்ல வருமானம் கிடைக்கும் வகையில் நெல்லை கிராப்ட்ஸ்' விற்பனை அங்காடி செயல்பட்டு வருகிறது.




# வளம் பெற்று வரும் சுய உதவிக் குழு



நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சிக்குட்பட்ட காட்டேரி பகுதியில் செயல்படும் சாமந்தி பூ மகளிர் சுய உதவி குழுவின் உறுப்பினர்கள் காய்கறி மற்றும் பழங்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்து வருகின்றனர். இக்குழுவின் உள்ள 10 உறுப்பினர்களில் 8 நபர்கள் காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தி பிரிவிலும், 2 நபர்கள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதலிலும் ஈடுபட்டு வருகின்றனர். உற்பத்தி செய்யப்படும் பழங்கள் மற்றும் காய்கறிகளை அருகிலுள்ள சில்லரை கடைகள், பொருட்காட்சிகள் மற்றும் விற்பனை கண்காட்சிகள் மூலம் விற்பனை செய்து வருகின்றனர்.

வருடத்திற்கு இரண்டு மாதங்கள் மட்டுமே இத்தொழிலில் ஈடுபட்டு வரும் சாமந்தி பூ மகளிர் சுய உதவி குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு 12,000/– ரூபாய் வரை வருவாய் பெற்று வருகின்றனர்.

தங்களுக்கு பல்வேறு வகையிலும் உதவி வரும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு சாமந்தி பூ மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# பொருளாதார வளர்ச்சி தந்த இயக்கம்



விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சியில் செயல்படும் புஷ்பவனம் மகளிர் சுய உதவிக் குழுவானது 2017ஆம் ஆண்டு 12 உறுப்பினர்களைக் கொண்டு துவக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்கள் குழுவாக இணைவதற்கு முன்னர், வீட்டு வேலை மற்றும் கீரை வியாபாரம் செய்து வந்தனர். குழு துவங்கிய பின்னர் சுயமாகத் தொழில் தொடங்கிட தீர்மானித்து, வங்கியில் நேரடிக் கடனாக ஒரு இலட்சம் ரூபாய் பெற்று அத்தொகையை மூலதனமாகக் கொண்டு, அப்பளம் தயாரிக்கும் தொழிலை செய்யத் துவங்கினர். தொடர்ந்து இரண்டாவது மற்றும் மூன்றாவது முறையாக வங்கி நேரடி கடனாக ஆறு இலட்சம் ரூபாய் பெற்று, தங்களது தொழிலை மேம்படுத்தி உள்ளனர்.

இக்குழுவினர் தயாரிக்கும் அப்பளங்களை இராஜபாளையம் நகராட்சியில் உள்ள மளிகை கடைகளுக்கு விற்பனை செய்கின்றனர். இதன் மூலம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் மாதந்தோறும் 6,000/– ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது. தற்போது புஷ்பவனம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களின் குடும்பங்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளன. இவர்களின் குழந்தைகளும் கல்லூரி படிப்பு வரை படிக்க வைத்துள்ளனர். தற்பொழுது இக்குழுவானது 35,000/– ரூபாய் உள்கடன் கொடுக்கும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. தங்களின் வாழ்வாதாரம் உயர வழிவகுத்து தந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு புஷ்பவனம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வளம் தந்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்



கரூர் மாவட்டம், உப்பிடமங்கலம் பேரூராட்சியின் மேற்குத் தெரு பகுதியில் 10 நபர்கள் சேர்ந்து சக்தி மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவக்கினர். இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து கடந்த 9 வருடங்களாக முறுக்கு வியாபாரம் செய்து வருகின்றனர். தங்களின் தொழிலுக்குத் தேவையான முதலீட்டிற்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வங்கி கடனாக 10,00,000/– ரூபாய் பெற்று உள்ளனர். அந்த தொகையினைக் கொண்டு, மூலப்பொருட்கள் வாங்கி, சுவையான முறுக்கு வகைகளைத் தயார் செய்து தங்கள் பகுதியில் உள்ள கடைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் கிடைக்கும் வருவாயினைக் கொண்டு தங்களின் குடும்பத்தினை சிறப்பாக நடத்தி வருவதுடன், தங்களது குழந்தைகளையும் நன்கு படிக்க வைத்து வருகின்றனர். தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி செய்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வளர்ச்சி தந்த வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி




இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி, ராஜ வீதியில் உள்ள ஸ்ரீதெட்சிணா சிறப்பு சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் நெசவுத் தொழில் செய்து வருகின்றனர். இக்குழுவின் உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் காட்டன் புடவை, பட்டுப் புடவைகள் பரமக்குடி நகராட்சிப் பகுதி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இக்குழுவில் உள்ள 6 உறுப்பினர்கள் இணைந்து உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலில் ஈடுபட்டு வருகின்றனர். நாளொன்றுக்கு 6 புடவைகள் உற்பத்தி செய்யப்பட்டு ஸ்ரீ தெட்சிணா சில்க்ஸ் என்ற பெயரில் பரமக்குடி பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களிலும், மாவட்ட அளவில் நடைபெறும் கண்காட்சி மற்றும் பொருட்காட்சி மூலம் விற்பனை செய்து வருகின்றனர்.

நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருவதன் மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வரும் ஸ்ரீதெட்சிணா சிறப்பு சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள், தங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு உதவி வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றிகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் தந்த வளர்ச்சி



திண்டுக்கல் மாவட்டம், பழனி நகராட்சி, காமராஜர் நகர் பகுதியில் வசிக்கும் 12 பெண்கள் ஒன்று சேர்ந்து, 2015–ஆம் ஆண்டு புரட்சி மலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவக்கினர். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி, திண்டுக்கல் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் இக்குழுவினர் தொழில் பயிற்சி பெற்று, வாழ்வாதார வளர்ச்சிக்காக மலர் மாலைகள், பூச்செண்டுகள் போன்றவற்றை தயாரிக்கும் தொழிலை மேற்கொள்ள துவங்கினர். மேலும், திருவிழா மற்றும் திருமண விழாக்களுக்கு மேடை அலங்காரங்கள் செய்து கொடுக்கும் வேலையையும் செய்ய துவங்கினர். பூமாலைகள், பூச்செண்டுகள் தயாரிக்கும் வேலையில் 4 நபர்களும், விற்பனை பிரதிநிதிகளாக 2 நபர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

இக்குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உள்ளூர் மற்றும் சுற்றுப்புற கிராம பகுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது. பண்டிகை மற்றும் திருவிழா காலங்களில் விற்பனை அதிகமாகவும், மற்ற தினங்களில் சராசரியாகவும் உள்ளதால், இத்தொழிலின் மூலம் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 300/– ரூபாய் வரை வருவாய் கிடைத்து வருகிறது.

தொழில் பயிற்சி வழங்கி, வாழ்வாதார வளர்ச்சிக்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு புரட்சி மலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# கைவண்ணத்தால் வளம் பெற்ற வாழ்வு






காஞ்சிபுரம் மாவட்டம், கிழக்கு மாங்காடு, ஸ்ரீராம் நகர் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் மலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் துணிகளில் ஆரி வேலை, எம்பிராய்டரி, திரெட் ரிப்பன் ஒர்க் போன்றவற்றை செய்து மாவட்ட அளவில் விற்பனை செய்து வருகின்றனர். இத்தொழிலில் ஈடுபட்டு வரும் 5 உறுப்பினர்களில் 4 பேர் உற்பத்திப் பிரிவிலும், ஒருவர் விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதலிலும் ஈடுபட்டு வருகின்றனர். இக்குழுவின் உறுப்பினர்கள் நாள் ஒன்றிற்கு குறைந்தது 2 ஜாக்கெட்டுகளுக்கு ஆரி வேலை, எம்பிராய்டரி, திரெட் ரிப்பன் ஒர்க் போன்றவற்றை செய்து வருவதுடன், மாவட்ட அளவில் நடைபெறும் பொருட்காட்சி மற்றும் விற்பனை கண்காட்சி மூலம் தங்களின் தயாரிப்புகளை விற்பனை செய்தும் வருகின்றனர். இந்தத் தொழிலின் மூலம் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு நபரும் தலா 300/– ரூபாய் வரை வருவாய் பெற்று வருகின்றனர்.

# செம்பருத்தி மகளிர் குழுவின் வளர்ச்சி





நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் இயங்கி வரும் செம்பருத்தி மகளிர் சுய உதவிக் குழுவானது சானிடரி நாப்கின் உற்பத்தி செய்து புதுயுகம் என்ற வணிகப் பெயரில் நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துமனைகளில் அரசு மூலம் வியாபார ஆணை பெற்று சப்ளை செய்து வருகின்றனர். இக்குழுவில் உள்ள 12 உறுப்பினர்களில் 8 உறுப்பினர்கள் உற்பத்தி பிரிவிலும், 4 உறுப்பினர்கள் விற்பனை பிரிவிலும் ஈடுபட்டு, தனியார் நிறுவனங்களிடம் வியாபார ஆணைகள் பெற்று விற்பனை செய்து வருகின்றனர்.

இத்தொழிலின் மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வரும் செம்பருத்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள், தங்களுக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து, வருவாய் பெற வழிவகை செய்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றிகனைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்**
**சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."**

# தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

## கணினி மையத்தால் நன்மை! கல்வியுடன் தொழில் மேன்மை!




என் பெயர் துர்க்காதேவி, நானும் என் கணவரும் சேர்ந்து நானும் எங்கள் கணினி நிலையத்தை 14 ஆண்டுகளாக நடத்தி வருகின்றோம். எங்கள் நிலையத்திற்கு பல்வேறு மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வந்து இணையத்தை பயன்படுத்தி பயின்று வருகின்றனர். இந்த நிலையத்தில் எங்களுக்கு கிடைக்கும் வருமானம் அளவாக இருந்தாலும் பலருக்கும் கல்விச் சார்ந்து பயனளிக்கும் நல்லதொரு வாழ்க்கைத் தொழிலாக இருக்கின்றது.

எங்கள் நிலையத்தை ஒட்டி காலியாக இருந்த ஒரு கடையை வாடகைக்கு எடுத்து, அதில் தேநீர் கடையையும் தொடங்க விரும்பினேன். ஆனால் 2020 கோவிட் ஊரடங்கின் போது, எங்கள் நிலையத்தை மூடவேண்டி இருந்ததால் அந்த திட்டத்தை நிறுத்தி வைத்தேன். சில மாதங்களுக்குப் பிறகு, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில் வழங்கப்படும் தொழில் முதலீட்டுக் கடனுதவிக்கு விண்ணப்பித்து, ரூபாய் 30,000/– ரூபாய் கடன் பெற்றேன். இந்த நிதியின் மூலம் தேநீர் கடையை நடத்துவதற்கான பொருட்களை வாங்கினேன். மேலும் எங்கள் கணினி நிலையத்தை சீரமைக்க கொஞ்சம் பணத்தைப் பயன்படுத்தினேன்.

இப்போது இரண்டு கடைகளிலும் மாதம் 22 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் ஈட்டுகின்றோம். தேநீர் கடையில் மட்டுமே மாதம் 15,000/– ரூபாய் வருமானம் கிடைக்கின்றது. இது என் வணிகத்தை மேம்படுத்துவதற்கு புதிய பொருள் வளத்தை கொடுத்துள்ளது. இதனைக் கொண்டு வீட்டில் பல்வேறு பலகாரங்களையும் தயாரித்து விற்பனை செய்ய விரும்புகின்றேன். **இந்த ஆண்டு எனக்கு** சவாலாக இருந்தாலும், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் நிதியுதவியால் தேநீர் கடையைத் தொடங்கி நடத்த முடிந்துள்ளது. கூடவே இன்னும் சாதிக்க வேண்டுமென்ற விருப்பத்தையும் தன்னம்பிக்கையையும் கொடுத்துள்ளது.

- **ஆர். துர்காதேவி,**
திருவரங்குளம் ஊராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்

## நான் நடத்தும் கடையே... நான் நடக்கும் கால்கள்..!

என் பெயர் பழனியம்மாள், திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் வட்டாரம், அழகுமலை ஊராட்சியில் வசித்து வரும் நான் இந்த குறுங்கடையை (Petty Shop) கடந்த ஐந்து ஆண்டுகளாக நடத்தி வருகின்றேன். என் இரண்டு கால்களும் செயல்பட முடியாத நிலையில் சவாலாக இருப்பதால், இந்த கடைதான் என் வருமானத்திற்காக நடக்கின்ற கால்கள். என்னால் அதிகமாக சம்பாதிக்க முடியாவிட்டாலும், என்னால் சொந்தமாக வருமானம் ஈட்ட முடிகின்றது என்பதே நல்ல முயற்சிதான். கடந்த ஆண்டு கொரோனா ஊரடங்கின் காரணமாகப் பல மாதங்கள் கடையை மூடினேன். இது நான் எதிர்பார்க்காத ஒரு கொடுங்கனவாக இருந்தது. ஊரடங்கு தளர்த்தப்பட்டவுடன் என் கடையை மீண்டும் திறக்கவோ, கடைக்கான பொருட்களை வாங்கவோ என்னிடம் பணமில்லை.

அப்போதுதான் நான் உறுப்பினராக இருக்கும் சுய உதவிக் குழு மூலம், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில் தொழில் முதலீட்டு நிதி அளிப்பதை கேள்விப்பட்டேன். எங்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் விண்ணப்பித்து, சில நாட்களுக்குள் 15,000 ரூபாய் நிதியுதவியைப் பெற்றேன்.

இந்த நிதியில் என் கடைக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் வாங்கி வைத்தேன். கூடவே மசாலாப் பொடிகளையும் சேர்த்துக் கொண்டேன். இந்த இரண்டு ஆண்டுகளில் மிகுந்த தன்னம்பிக்கை மற்றும் எதையும் தாங்கும் துணிச்சலை வளர்த்துக் கொண்டேன். வாடிக்கையாளர் தேவைகளையும் கோரிக்கைகளையும் உணர்ந்து செயல்படுகின்றேன். பேரிடர் காலத்தில் விழிப்பாக இருப்பதையும் கற்றுக் கொண்டேன். எல்லாவற்றையும் விட, சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளேன். கடையை நல்ல முறையில் நடத்தி வருகின்றேன்.



- **சி. பழனியம்மாள்,**
அழகுமலை ஊராட்சி,
பொங்கலூர் வட்டாரம், திருப்பூர்.

# உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை சொல்வோம்! இயற்கை உரத்தொழிலில் நல்ல திறத்தோடு வெல்வோம்!



2018–ஆம் ஆண்டு 200 பேர் வரை இணைந்து தொடங்கப்பட்ட மேட்டுப்பாளையம் காய்கறி உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு, தற்பொழுது 900 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. இதன் நோக்கம், மானிய விலையில் உரங்களைக் கொள்முதல் செய்வதும், உழவர்களுக்கு மானிய விலையில் விற்பனை செய்வதும், இதன் மூலம் நியாயமான வருமானத்தை ஈட்டுவதும் ஆகும். உரங்களையும், விதைகளையும் சில்லறை வணிகத்தில் விற்பனை செய்வதால் அதிக இலாபம் கிடைக்காது என்பது எங்களுக்குத் தெரியும். அதனால் உழவர்களுக்கு நன்மையை வழக்கும் விதமாக உர விற்பனையை நாங்கள் பிடித்துக் கொண்டோம்.

இந்த உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பைத் தொடங்க அந்த நேரத்தில் 10 இயக்குநர்கள், ஆளுக்கு ஒரு லட்சம் ரூபாய் நிதியுதவி செய்தனர். மேலும் எங்கள் பகுதியிலுள்ள, உழவர் குழுவினர் (ஏறக்குறைய 20 உறுப்பினர்கள்) இரண்டு லட்சம் ரூபாய் நிதியுதவி செய்தனர். இப்பொழுது அவர்களும் எங்களது கூட்டமைப்பின் ஒரு பகுதியாக செயல்படுகின்றனர்.

வேளாண் சந்தைத் துறையிலிருந்து ஒரு அலுவலகத்தை நடத்த அதற்கான பொருட்கள் தேவைப்பட்டன. எழுதுபொருட்கள், கணினி, பில்லிங் மென்பொருள் போன்றவையும் வாங்கப்பட்டன. இந்த வகையில் படிப்படியாக, இந்த உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பினால், உரங்களை விற்பனை செய்யும் இந்தக் கடையும் திறக்கப்பட்டது. இதனால் உழவர்கள் இதில் ஆர்வமாக இணையத் தொடங்கினர். கூட்டமைப்பு 900–க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு தற்போது இயங்கி வருகின்றது.

கொரோனா ஊரடங்கு இந்த உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பின் வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. சரியான நேரத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் 10 லட்சம் ரூபாய் நிதியுதவி அளித்து கூட்டமைப்பிற்கு புத்துயிர் கொடுத்தது. இந்த நிதியின் மூலம் நாங்கள் இயற்கை உரத்தை உற்பத்தி செய்யத் தொடங்கினோம். நாங்கள் உரத்திற்கான மூலப் பொருட்களை (இயற்கைக் கழிவுகள்) விலைக்கு வாங்குகின்றோம். அவற்றை எங்கள் மையத்தில் பதப்படுத்தி எங்கள் சொந்த வர்த்தக முத்திரைப் பெயரில் சந்தைப்படுத்துகின்றோம்.

இங்கு பூச்சிக் கொல்லிகளும் விதைகளும் விற்பனை செய்யப்பட்டாலும், உரங்களுக்குத்தான் அதிக தேவை உள்ளது. 2018–19 இல் எங்களது விற்பனை சுழற்சி 28 லட்சம் ரூபாயாக இருந்தது. ஆனால் 2019–20 ஆம் ஆண்டு அது 52 லட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

– **பி. விநோதினி,** இயக்குநர்,
மேட்டுப்பாளையம் காய்கறி உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்,
சிறுமுகை பேரூராட்சி, காரமடை வட்டாரம்,
கோயமுத்தூர் மாவட்டம்.

# விண்ணைத் தொடும் முயற்சி! மாடித் தோட்டப் பயிற்சி!

இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் சார்பில் மாவட்ட புத்தாக்கத் திட்டப் பணியாளர்கள் மற்றும் தோட்டக்கலைத் துறையினர் இணைந்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம் வட்டாரத்தில் செயல்படும் பல்வேறு சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த 50 மகளிருக்கு மாடித் தோட்ட கிட்டுகளை வழங்கினர். இதில் 34 புதிய பயனாளிகள் மற்றும் மீதமுள்ளவர்கள் கடந்த ஆண்டு தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் சிறப்பு நிதியுதவி பெற்றவர்கள் ஆவர்.



உங்களுக்கு நீங்களே செய்யுங்கள் (DIY) ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் விநியோகிக்கப்பட்ட இந்த கிட்டுகளில் தேங்காய் நாறுகள் கொண்ட அடித்தட்டுப் பகுதியும், அதில் இயற்கை உரங்களும் இடப்பட்டிருந்தன. அவற்றில் தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய், மிளகாய், கீரை மற்றும் இதர வகை நடவுகள் இருந்தன. இதன் மூலம் மக்கள் தங்களுக்கு வேண்டிய இயற்கை காய்கறிகளை தாங்களே விளைவிப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். இதன் மூலம் இந்த மாவட்டத்தில் மாடித்தோட்டங்கள் செழித்தோங்கும்!

# நலமான பயிருக்கு விதையூட்டுகிறோம்...
# இயற்கை உழவிற்கு உரமூட்டுகிறோம்..!



விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாரம், சாமிநத்தம் ஊராட்சியில் வசிக்கும் நாங்கள் 2017–ஆம் ஆண்டு 20 உறுப்பினர்களுடன் அருணாச்சலம் உழவர் உற்பத்தியாளர் குழு என்ற இந்த சிறிய உழவர்கள் குழுவை தொடங்கினோம். உரம், விதைகள் விற்பனை மற்றும் ஆடு வளர்ப்பில் திறமை பெற்றிருந்தோம். 2020–ஆம் ஆண்டு வரை, நாங்கள் தன்னிறைவு பெற்றவர்களாகவும், ஒருவருக்கொருவர் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடியவர்களாகவும் இருந்தோம். நாங்கள் எதிர்பாராத விதமாக கொரோனா ஊரடங்கு காலத்தில் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்ய முடியாமல் சிரமத்திற்கு உள்ளானோம்.

தக்க சமயத்தில், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் கொடுத்த 1.50 லட்சம் ரூபாய் நிதியுதவி, மீண்டும் எங்கள் பயணத்தை துவக்க உதவியது. திட்டம் அளித்த நிதியில் நாங்கள் 23 ஆடுகளை வாங்கியதுடன், இயற்கை உரங்களை சில்லறையாக விற்பனை செய்ய கவனத்தைச் செலுத்தினோம். நாங்கள் உரத்தை ராம்கோ குழுவினரிடமிருந்து வாங்கி, மானிய விலையில் விற்பனை செய்கின்றோம். இயற்கை விவசாயத்தைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால், விற்பனை சராசரியாகவே நடக்கிறது.

ஆனால் எங்கள் வர்த்தகம் இன்னும் பெருகும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அடுத்த ஆண்டுக்குள் எங்கள் சொந்தப் பண்ணையிலுள்ள ஆடுகள், மண்புழு, கால்நடை போன்றவற்றிலிருந்து இயற்கை உரங்களைத் தயாரிக்க உள்ளோம். இதன் மூலம் எங்கள் உற்பத்தியாளர் குழுவை வளமானப் பாதையில் கொண்டு வருவோம்!

– **என். முனியசாமி,** செயலாளர்,
அருணாச்சலம் உழவர்
உற்பத்தியாளர் குழு,
சாமிநத்தம் ஊராட்சி, சிவகாசி வட்டாரம்,
விருதுநகர் மாவட்டம்.

# தொழில் தொடங்கக் கற்பனை! ஊர் மணக்க பூ விற்பனை!



என் பெயர் ஆர். பாக்கியம், சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டாரம், முப்பையூர் ஊராட்சியில் வசிக்கும் எனக்கு பூ வியாபாரமே என் வாழ்வின் மூலாதாரமாக உள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக ஒரு ஓலைக் கூரையின் கீழ் பூ விற்பனை செய்து வருகின்றேன். எதிர்பாராமல், கடந்த ஆண்டு என் கணவர் காலமாகி விட்டதால், மூன்று குழந்தைகளுடன் தனியாக வாழ்ந்து வருகிறேன். மழை பெய்யும் போதெல்லாம் ஓலைக் கூரை ஒழுகிக் கொண்டிருக்கும். எனது பூ விற்பனையில் வருவாய் சொற்பமாக இருப்பதால், கூரையை சரி செய்ய பணம் இல்லை.

நான் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழு எனக்கு ஆதரவாக இருக்கின்றது. இக்குழுவின் மூலம் எங்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் விண்ணப்பித்து, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திலிருந்து 20,000 ரூபாய் நிதியுதவி பெற்றேன். பெரிய சவாலாக இருந்த கடந்த ஆண்டில் இந்தத் திட்டத்தின் நிதியுதவியின் மூலம் சமாளித்து மீண்டு வந்திருக்கின்றேன்.

இந்த பணத்தைக் கொண்டு, எனது கடைக்கு பக்கத்தில் ஒரு கட்டடத்திற்கு வாடகை முன்பணம் செலுத்தினேன். இப்போது மாதம் ரூபாய் 3000 – 4000 வருமானம் ஈட்டுகின்றேன். தற்பொழுது விழாக் காலம் என்பதால், இன்னும் அதிக விற்பனை நடக்கும் வருமானமும் அதிகரிக்கும்.

**ஆர். பாக்கியம்,**
முப்பையூர் ஊராட்சி,
தேவகோட்டை வட்டாரம்,
சிவகங்கை மாவட்டம்.

# பணியில் கற்ற கல்வி... பயனுள்ள நிறுவன வேள்வி..!




என் பெயர் தெய்வானை, நான் சென்னையில் ஒரு இன்ட்டீரியர் டிசைனிங் நிறுவனத்தில் அளவு ஆய்வாளராக 4 ஆண்டுகள் பணிபுரிந்து வந்தேன். இங்கு எனது பொறுப்பு செலவு மற்றும் சேதாரத்தை குறைத்தல் மற்றும் பணத்திற்கான மதிப்பை அதிகரிப்பதாகும். என் திறமையின் மூலம் பல்வேறு இன்டீரியர் டிசைனிங் கட்டுமானங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். 2020 ஆம் ஆண்டு ஊரடங்கின் போது எனது வேலையை இழந்து என் சொந்த ஊருக்குத் திரும்பினேன். அதே சமயம் எனக்கு வேறு யாரிடத்திலும் சென்று வேலை செய்வதற்கு விருப்பமில்லை.

நான் சொந்தமாக இன்டீரியர் டிசைனிங் கட்டுமானங்களுக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனத்தை துவங்க திட்டமிட்டேன். இதற்கு எனக்கு முதலீட்டு நிதி தேவைப்பட்டது, என் தாயார் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்ததால் அவர் மூலமாக, எங்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் உதவியுடன் விண்ணப்பித்து, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திடமிருந்து ஒரு லட்ச ரூபாய் கடனுதவியாகப் பெற்றேன். மேலும் எனது சேமிப்பையும் இதனுடன் சேர்த்து என் சொந்த நிறுவனத்தை தொடங்கினேன்.

என் நிறுவனத்தின் மூலம் பல்வேறு உள் வடிவமைப்பு கட்டுமானங்களுக்கு நல்ல நல்ல ஆலோசனைகள் வழங்கி வருகின்றேன். இதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டதுடன் நல்ல வருமானத்தையும் ஈட்டி வருகின்றேன். ஏற்கனவே ஒரு நிறுவனத்தில் வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தை விட இப்பொழுது நான் அதிகமாக சம்பாதிக்கின்றேன். மேலும் வாங்கிய கடனுதவியையும் தவறாமல் செலுத்தி வருகின்றேன். தொழிலில் எனது பங்கு மற்றும் வணிகத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் நான் நிறைய கற்று வருகின்றேன்.

**- தெய்வானை,**
கீழ்திருப்பளங்குடி ஊராட்சி,
மன்னார்குடி வட்டாரம்,
திருவாரூர் மாவட்டம்.

# அழகான முகங்களை பேரழகாக்கும் தொழில் கலை..!

என் பெயர் விஜி, நான் ஒரு தொண்டு நிறுவனத்தில் ஏழாண்டுகள் பணியாற்றினேன். எனக்குக் குழந்தை பிறந்த பிறகு, இரண்டு ஆண்டுகளாக வீட்டு நிர்வாகம் செய்து வந்தேன். எனக்கு தையற்தொழில் நன்றாகத் தெரிந்திருந்தாலும், புதிய நுட்பத்தைக் கற்றுக் கொள்ள விரும்பி, ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையத்தின் (RSETI) உதவியோடு, அழகுக்கலை பயிற்சி பெற்றேன். ஆனால் என்னால் அழகு நிலையம் திறக்க முடியவில்லை. அதற்கான நிதி என்னிடமும் இல்லை, குடும்பத்திலும் நிதி வசதி இல்லை.

பக்கத்திலுள்ள அழகு நிலையத்தில் சில மாதங்கள் தொழிற்பயிற்சி செய்தேன். இதனால் நல்ல பெயரும், புதிய வாடிக்கையாளர்களும் என்னைத் தேடி வந்தனர். 2020 ஊரடங்கு காலத்தில், புதிய அழகு நிலையத்தைத் தொடங்க முடிவு செய்தேன். எனவே தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தை அணுகி, ஒரு லட்சம் ரூபாய் நிதியுதவி பெற்றேன்.

என் தரப்பில் இரண்டு லட்சம் ரூபாய் சேமிப்பையும் சேர்த்து, கடைக்குத் தேவையானப் பொருட்களை வாங்கி, 'மித்ரா அழகு நிலையம் மற்றும் தையல் நிலையம்' என்ற பெயரில் கடையைத் திறந்தேன். தொண்டு நிறுவனத்தில் கிடைத்த தொடர்பு வட்டத்திற்கும், பெயருக்கும் எனக்கு நிறைய வாடிக்கையாளர்கள் கிடைத்துள்ளனர். மேலும் புலியூர், பாப்பா கோவில், மஞ்சகொல்லை முதலிய ஊர்களிலும் என் அழகு நிலையத்திற்கு வாடிக்கையாளர்கள் உள்ளனர். இப்போது மாதம் 25 – 30 ஆயிரம் வருமானம் ஈட்டும் நான், உதவிக்காக ஒரு பெண்ணையும் வேலைக்கு அமர்த்தியுள்ளேன்.

என் கடைக்கு குளிரூட்டும் வசதியை ஏற்படுத்தி, மேலும் உயர்தர அழகு சாதனப் பொருட்களை வாங்க விரும்புகிறேன். இதுதொடர்பாக வங்கியுதவி மற்றும் கடனுதவி தொடர்புகளைப் பெற்றுக் கொடுக்க மாவட்டக்குழு எனக்கு உதவி வருகிறது. என் நிறுவனத்தின் உதவியால், வாடிக்கையாளருடன் நட்பாக பேசிப்பழகவும், பேரம் பேசி உரிய கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளவும் கற்றுக் கொண்டேன். என் அழகு நிலையத்தை மேலும் அழகாக்குவேன்!



**எஸ். விஜி,** பெருங்கடம்பனூர் ஊராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம்

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்
## ( ஊரக வளர்ச்சித் துறை )

திரு. **பிரவீன் பி. நாயர்,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

**ஜி. முத்து மீனாள்**
கூடுதல் இயக்குநர்

**ஆர். ரவிச்சந்திரன்**
தகவல் (ம) தொழில் நுட்ப மேலாளர்

# மாநில அளவிலான வங்கியாளர்கள் கூட்டத்தில் கடற்பாசி வளர்ப்பு தொழில் குறித்த கண்காட்சி அரங்கம்





விருதுநகர் மாவட்டத்தில் மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஒன்றிய இணையமைச்சர் (மீன்வளம், கால்நடை பராமரிப்பு (ம) பால் வளர்ப்பு மற்றும், தகவல் (ம) ஒளிபரப்பு) திரு. எல்.முருகன் அவர்கள் ஆகியோர் தலைமையில் 12.09.2021 அன்று நடைபெற்ற மாநில அளவிலான வங்கியாளர்கள் கூட்டத்தில் வங்கியாளர்கள், நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், தொழில் முனைவோர்கள், வியாபாரிகள் மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மகளிர் கூட்டுப் பொறுப்பு குழுக்களின் நுண்தொழிலான கடற்பாசி வளர்ப்பு தொழில் குறித்த செயல்பாடுகள் வங்கிகளின் சார்பில் காட்சிப்படுத்தப்பட்டது. இக்கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு இந்தியன் வங்கி காரைக்குடி மண்டலத்தின் மூலம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியைப் பார்வையிட்ட மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் பெருமக்கள், கடற்பாசி வளர்ப்பால் கிடைக்கும் வருமானம் மற்றும் அதன் பயன்பாடு குறித்து கேட்டறிந்தனர். மேலும் கடற்பாசி வளர்ப்பை வெகுவாக பாராட்டியதோடு, தொடர்ந்து சிறப்பாக செயல்பட அரசு தேவையான உதவிகளை செய்யும் என்றும் நம்பிக்கையளித்தனர். தொடர்ந்து இக்கண்காட்சியில் பங்கேற்ற சவேரியார் மற்றும் நெய்தல் கடற்பாசி வளர்ப்பு கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் கடன் வழங்கப்பட்டது.





# வருமானத்தை பெருக்கும் தொழில் பயிற்சி மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளிகளின் வெற்றிக் கதை



என் பெயர் ஆனந்தி, நான் தூத்துக்குடி மாவட்டம், முள்ளக்காடு ஊராட்சி, பொட்டல்காடு கிராமத்தில் வசித்து வருகிறேன். இப்பகுதியில் வசிக்கும் மக்களின் பிரதான தொழில் உப்பளங்களில் வேலை செய்வதாகும். எங்கள் பகுதியில் செயல்படும் விமலா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான மாரிக்கனி, பானுமதி, பத்திரகாளி, காளியம்மாள் ஆகியோருடன் நானும் இணைந்து, சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் மூலம் தையல் பயிற்சி பெற்றோம். பின்பு நாங்கள் 5 பேரும் சேர்ந்து பவளம் என்ற கூட்டுப் பொறுப்புக் குழு அமைத்து தையல் தொழிலுக்காக இந்தியன் வங்கி மில்லர்புரம் கிளையில் கூட்டமைப்பின் மூலமாக கடன் பெற்றோம். இதில் எங்கள் பங்குத் தொகை ரூ.12,500/–, வங்கி கடன் ரூ.2,37,500/– என மொத்தம் ரூ.2,50,000/– முதலீடு செய்து, தையல் இயந்திரம் மற்றும் அதற்கான பொருட்களை வாங்கி தொழில் செய்து வருகிறோம். சராசரியாக மாதம் ரூ.30,000/– வரை வருவாய் பெற்று அதில் எங்கள் சம்பளம் போக மீதமுள்ள தொகையை வங்கிக் கடன் திருப்பமாக செலுத்தி வருகிறோம். எங்களின் குடும்பங்களுக்கு நிலைத்த வாழ்வாதாரம் கிடைக்க உதவி செய்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



# கூட்டுப் பொறுப்புக் குழுவின் வெற்றிக்கதை

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் கூட்டமைப்புகளில் சிறுளப்பாக்கம் ஊராட்சி அளவிலான மகளிர் கூட்டமைப்பும் ஒன்று. இக்கூட்டமைப்பில் 2000–க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இணைந்துள்ளதுடன், அவர்களின் பிள்ளைகள் அதே பகுதியில் அமைந்துள்ள பள்ளியில் படித்து வருகின்றனர். இக்கூட்டமைப்பை சார்ந்த மக்கள் மற்றும் பள்ளி மாணவ –மாணவியர் 37 கி.மீ. சென்று கல்வி சார்ந்த உபகரணங்கள் மற்றும் பிற பொருட்கள் வாங்கி வரும் சூழ்நிலை பல ஆண்டுகளாக நிலவி வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ், 5 பெண்களைக் கொண்ட கூட்டுப் பொறுப்பு குழுவை உருவாக்கி, அதற்கு பல்லவன் கிராம வங்கியின் மூலம் 1,90,000/– ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. இக்கடனுதவியைக் கொண்டு அப்பகுதியில ஸ்டேஷனரி மற்றும் பேன்சி ஸ்டோர் துவங்கப்பட்டது. இதன் மூலம் ஏறத்தாழ 800–க்கும் அதிகமான மாணவ, மாணவியர்கள் தொலைதூரம் சென்று தங்களுக்கு தேவையான உபகரணங்களை வாங்கும் சிரமத்திலிருந்து மீண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து இத்தொழிலின் மூலம் கிடைக்கும் வருவாய் மூலம் சிறப்பான முறையில் வங்கி கடனையும் முழுமையாக திரும்ப செலுத்தி உள்ளனர். மேலும் இத்தொழில் மூலம் தங்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# உலக சுற்றுலா தின கண்காட்சி







புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்களின் ஆணைக்கிணங்க கடந்த 27.09.20121 அன்று உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை ஆயுதப்படை மைதானத்தில் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் சார்பில் கட்டுமாவடி ஊராட்சியில் செயல்படும் கடலோசை கருவாடு உற்பத்தியாளர்கள் கூட்டுப் பொறுப்பு குழுவினரின் மதிப்பு கூட்டப்பட்ட கருவாடு வகைகளும், வெட்டிவயல் ஊராட்சி, பாலக்குடி மீனவ கிராமத்தில் செயல்படும் நெய்தல் கடற்பாசி வளர்ப்பு கூட்டுப் பொறுப்புக் குழுவினர் உற்பத்தி செய்யும் கடற்பாசி வகைகளும் மற்றும் நாட்டாணிபுரசக்குடி ஊராட்சியின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கால்நடைகளுக்கு தேவையான மூலிகை முதலுதவி பெட்டியும் இடம் பெற்றிருந்தன.

இக்கண்காட்சியைப் பார்வையிட்ட புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்களிடம் அவர்கள் மேற்கொள்ளும் தொழில்கள் குறித்து தனித்தனியே கேட்டறிந்ததுடன், தொழில் மற்றும் விற்பனையை மேம்படுத்தத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் செய்து தருவதாக கூறியுள்ளார். தொடர்ந்து குழு உறுப்பினர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

# ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளின் வணிக மேம்பாட்டு முகவர்களாக செயல்படுதல்




தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் இந்தியன் வங்கி, தமிழ்நாடு கிராம வங்கி மற்றும் ஐசிஐசிஐ வங்கி ஆகிய வங்கிகளில் வணிக மேம்பாட்டு முகவர்களாக செயல்படுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூட்டமைப்பில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு தொழில் கடன் பெற்று தருவது மற்றும் கடன் திருப்பம் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு 2 சதவீதம் தரகு தொகை வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. கடன் தொகை விடுவிக்கும் போது 1 சதவீதம் மற்றும் கடன் திருப்பம் முடிந்த பின் 1 சதவீதமும் தரகு தொகையினை வணிக மேம்பாட்டு முகவர்கள் பெற்று வருகின்றனர்,

அதனடிப்படையில், கடந்த 17.09.2021 அன்று முகையூர் கூட்டு வள மையத்திற்குட்பட்ட ஏழு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளுக்கு மகளிர் சுய உதவிக் குழு கடன் மற்றும் கூட்டு பொறுப்புக் குழுக்களுக்கு தொழில் கடனாக இந்தியன் வங்கி கூவத்தூர் கிளையின் மூலம் 137.56 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1 சதவீத தரகுத் தொகையாக 1.38 ரூபாய் இலட்சம் கடன் தொகை விடுவிக்கும் போது வழங்கப்பட்டு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் நிதி நிலைமையை மேம்படுத்தியது மட்டுமின்றி வங்கிகளுக்கும், கூட்டமைப்பிற்கும் நல் உறவினை ஏற்படுத்திட வழிவகை செய்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

# முள்ளக்காடு ஊராட்சி முத்து கூட்டு பொறுப்புக் குழுவின் ஜெராக்ஸ் மற்றும் ஸ்டேஷனரி கடை



தூத்துக்குடி மாவட்டம், முள்ளக்காடு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் செயல்பட்டுவரும் முல்லை பரத் மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள முருகேஸ்வரி, சுபிதா, லதா, சுக்லாதேவி மற்றும் ரேணுகாதேவி ஆகிய ஐந்து நபர்களை சேர்ந்து தொழில் செய்யும் நோக்கத்தோடு கூட்டமைப்பின் மூலம் முத்து கூட்டுப் பொறுப்பு குழு ஒன்றை ஆரம்பித்து திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று இந்தியன் வங்கி, மில்லர்புரம் கிளையில் வங்கி கடன் 2,37,500/– ரூபாய் மற்றும் பயனாளின் பங்கு தொகை 12,500/– ரூபாய் என மொத்தம் 2,50,000/– ரூபாய் சேர்த்து அவர்களின் கிராமத்தில் ஜெராக்ஸ் மற்றும் ஸ்டேஷனரி கடை தொடங்கி, மாதந்தோறும் சராசரியாக சுமார் ரூ.25,000/– முதல் ரூ.30,000/– வரை வருமானம் பெற்று, சம்பளம் போக மீதமுள்ள தொகையை வங்கி கடன் செலுத்தி கடனை கட்டி முடித்து விட்டனர். மேலும், சங்கத்தின் நோக்கமான நிலைத்த வாழ்வாதாரம் என்ற அடிப்படையில் தங்களுக்கு வாழ்வாதாரம் வழங்கிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு முல்லை பரத் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

# பச்சையம்மன் கீற்று வியாபார கூட்டு பொறுப்பு குழு



தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள முகையூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மூலம் பச்சையம்மன் மகளிர் சுய உதவிக் குழுவிலுள்ள ஐந்து உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து பச்சையம்மன் கூட்டு பொறுப்பு குழுவாக ஒன்றிணைந்து கீற்று வியாபார தொழிலை செய்து வருகின்றனர். இத்தொழிலுக்கு அவர்களின் பங்குத் தொகையாக 12,500/– ரூபாய் மற்றும் இந்தியன் வங்கி கூவத்தூர் கிளையின் மூலம் கடன் 2,37,500/– ரூபாய் என மொத்தம் 2,50,000/– ரூபாயினை மூலதானமாகக் கொண்டு, கடந்த 17.08.2021 அன்று தொழில் தொடங்கி மாத வருமானமாக சுமார் 49,000/– ரூபாய் ஈட்டியுள்ளனர். இவ்வருமானத்திலிருந்து முதல் தவணையாக 12,500/– ரூபாய் கடன் திருப்பம் செய்துள்ளனர். கொரோனா காலகட்டத்தில் தொழில் செய்வதற்கு யாரும் உதவ முன்வராத நிலையில், தக்க நேரத்தில் முகையூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மூலம் இந்தியன் வங்கி கூவத்தூர் கிளையில் கடனுதவி பெற்று தந்து கொரோனாவினால் இழந்த வாழ்வாதாரத்தை மீண்டும் பெற வழிவகை செய்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு பச்சையம்மன் கூட்டு பொறுப்பு குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,

Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (89,500 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,1 Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN